1993 மார்ச் 18]

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னால் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், கடந்த இரண்டாண்டு களில் மட்டும் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் 300 பேருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், கணவனை இழந்த விதவைகளுக்கும் முக்கியத்துவம் தருகிற வகையில், அமைப்பாளர்களாக நியமிக்க, வயது வரம்பும் கல்வித் தகுதியும் தளர்த்தப்படுமா? அப்படித் தளர்த்தி அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒழ்வளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட வர்கள், விதவைத் தாய்மார்களுக்கு இப்போதே முன்னுரிமை அளிக்கப்பட்டுத்தான் சத்துணவுப் பணிகளில் நியமித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பி னர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மாண்புமிகு சட் மன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்த பரிந்துரைகள் அந்த வகையில்தான் பரிசீலிக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138. திரு. தி. சாத்தையா, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

138—

இராஜபாளையத்தில் ''டாக்டர் அம்பேத்கார் தியாகி இமானுவேல்'' பெயரில் கல்லூரி அமைத்தல்.

* 11010—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) இராஜபாளையம் நகரில் ''டாக்டர் அம்பேத்கார் தியாகி இமானுவேல்'' பெயரில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு கல்லூரி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கல்லூரி துவங்கப்படும்?

TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 18

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராஜபாளையம் நகரில் ''டாக்டர் அம்பேத்கார் தியாகி இமானுவேல்'' பெயரில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்லூரி அமைக்கும் செய்ற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவியின் அரசு ஏழை எளிய எஸ்.சி./எஸ்.டி. மக்களின் முன்னேற்றமே தமிழகத்தின் முன்னேற்றம் எனக் கருதி, கோடிக் கணக்கான ரூபாயை அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்காக ஒதுக்கியிருக்கிறது. நமது புரட்சித் தலைவி அரசு. அந்த எஸ்.சி./எஸ்.டி. ஏழை மக்களின் படிப்பு வசதிக்காக ஒதுக்கியிருக்கிறது. ஆனால் அவர்கள் 8வது வகுப்பு, பிளஸ் 2 வகுப்பு படித்த பிறகு குறிப்பிட்ட சதவீதம் பேர்தான் கல்லூரிப் படிப்புக்கு சேர்ந்து படிக்க முடிகிறது. இந்த சமுதாயத்திற்கு என்று எந்தவிதமான கல்லூரியும் இல்லாததால், பிளஸ் 2 முடித்தவுடன் அவர்கள் மேற்படிப்புக்கு செல்லமுடியாத சூழ்நிலை இருப்பதால் . . . . (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 11–00).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன்அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. திரு. சாத்தையா, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தி. சாத்தையா: இதுபோன்ற ஒரு கல்லூரியை தமிழகத்தில் இராஜபாளையம் தொகுதியில் ஏற்படுத்த முடியாவிட்டாலும்கூட தமிழகத்தில் எங்காவது ஓர் இடத்தில்—சென்னை நகரத்திலோ, மதுரையிலோ இதுபோன்ற ஒரு கல்லூரியை அமைத்து, இந்த எஸ்.சி./எஸ்.டி. மக்களின் கல்லூரிப் படிப்புக்கு வசதி செய்ய வரும் நிதியாண்டிலாவது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கல்லூரிகளிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கென தனியாகக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்ற பிறகு ஆண்டுக்காண்டு புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டு, அதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் பயன் பெற்று, கல்வித் தரத்தில் முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக நாம் அறிகிறோம். அந்த அளவுக்குச் சிறப்பாக நட

1993 மார்ச் 18]

வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற இந்த அரசாங்கம் ஆதி திராவிட மக்களின் கல்வித் தரத்தில் அக்கரை கொண்டு பணி யாற்றுகிற இந்த அரசாங்கம் மாணவர்களுடைய கோரிக்கை, அதாவது கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்ற கோரிக்கை இதுவரை எனக்கு வந்ததில்லை. ஆனால், மாணவர் விடுதிக்கு இடம் கேட்டு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. மாணவர் களுடைய கோரிக்கையை பரிசீலிக்கிற வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசாங்கம் மாணவ மாணவிகளுக்கு விடுதி களைத் திறந்து கொண்டிருக்கிறது, இதனால் அவர்கள் பயன் பெறுவதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்து கொண்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலேஜில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினருக்கு மட்டும்தான் இடம் கிடைக்கிறது. குறிப்பாக 60 சதவீதம் மார்க் பிளஸ் 2-ல் எடுத்த எஸ்.சி./எஸ்.டி. மாணவ மாணவிகள் கல்லூரிப் படிப்பு படிக்க விரும்பினால், அவர்கள் அத்தனை பேர்க்கும் கல்லூரிப் படிப்புக்கு வசதி செய்ய அரசு முன்வருமா எனக் கேட்டுக் கொண்டு, தியாகசீலர் இமானுவேல் அவர்கள் சமுதாயத்திற்கு செய்த தொண்டு, சமுதாயத்திற்காக வாழ்ந்த வாழ்க்கை ஆகியவற்றை இந்த எஸ்.சி./எஸ்.டி. மக்கள் தங்கள் மனதில் நிறுத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறும் வகையில் இந்த தமிழக சட்டப் பேரவையில் அன்னாரது திருவுருவப் படத்தை அமைக்க அரசு முன் வருமா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனிக் கேள்வி போடவும்; உட்காருங்கள். டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக உண்டு-உறைவிடப் பள்ளிகள் என்று தனியாக பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவ்வாறு அவர்களுக்காக தனியாக பள்ளிக் கூடங்கள் இருந்தாலும்கூட அவற்றில் வெற்றி பெற்று வரும் மாணவர்கள் கல்லூரி செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்ப தால் —எவ்வாறு அவர்களுக்காக பள்ளிகள் தனியாக இருக்கின் றனவோ அதைப் போல தமிழகத்தில் ஏதாவது ஓர் இடத்தில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு என்று கல்லூரிகள் நிறு வப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவர்கள் பிளஸ் 2இல் அதிக மதிப்பெண்கள் எடுத்து நல்ல பெர்சென்டேஜ் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் துறை ஏற்பட்ட காலத்தில் இருந்து அடையாத ஒரு சாதனையை இதய தெய்வம் தமிழக

முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் பிளஸ்-2 மாணவர்கள் 59 விழுக்காடும் எஸ்.எஸ்.எல்.சி. மாண வர்கள் 57 விழுக்காடும் பெற்றிருக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் அக்கரை கொண் டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் மேலும் அந்த மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு வாய்ப்புத் தந்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டுதான் என் போன்றவர்கள் எல்லாம் இன் றைக்கு இந்த ஆதிதிராவிட நலத்துறை மூலமாக பயன்பெற்று ஆதிதிராவிட நலத் துறையில் மாணவர்களுக்கு அதிகச் சலுகை கள் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஸ்காலர்சிப் மற்றும் கடன் வசதிகளும் செய்துகொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜ மன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அனைத்திந்திய ஷெட்யூல் வகுப்பினரின் தலைவர் என்ற முறையில் டாக்டர் அம்பேத்கார் பெயர் சென்னை சட்டக் கல்லூரிக்குச் சூட்டப்பட்டுள்ளது. அதே போல, தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் இனத் தலை வன் என்ற முறையில் மாவீரன் இமானுவேல் பெயரை தாழ்த் தப்பட்ட மக்களின் இரட்சகர் என்று பெயர் பெற்ற அவருடைய பெயரை எங்களது புரட்சித் தலைவி அவர்கள் ஏதாவது ஒரு அரசு கல்லூரிக்கு பெயரிட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். ஏற்கெனவே சாத்தையாவுக்கும் சொல்லியிருக்கிறேன்.

வினா எண் 139, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பிற் பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

139 —

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம்

*11960 —திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1992–93இல் கடன் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?